[5th March 1968

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இது எந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. ஆபரேஷன் அதிகமாக எந்த மாவட்டத்தில் செய்யப்பட்டிருக்கிறது ? குறைவாக எந்த மாவட்டத்தில் இருக்கிறது ? சில மதஸ்தர்கள், குறிப்பாக கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இதை ஆதரிப்பதாகத் தெரியவில்லை, என்று சொல்லப்படுகிறது, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவரம் என்னிடம் இப்போது இல்லை.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர்: இதனால் ஜனத்தொகை ஏதாவது குறைந்திருக்கிறதா ? கொஞ்சமாவது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : குறைந்திருப்பதாகத் தான் சொல்லப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : குறைந்ததால் தான் நம்முடைய மூன்று பார்லிமெண்ட் சீட் போய்விட்டது.

Intra Uterine Contraceptive Device

*180. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether an I.U.C.D. was inserted in a woman without her consent on 3rd August 1967 at the Hospital for Women and Children, Egmore ;

(*b*) whether this has been reported to the Superintendent of the hospital and the Police ; and

(c) the steps taken thereon ?

கருத்தடை " லூப் "

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை எழும்பூர் பிரசவ ஆஸ்பத்திரியில் 3—8—1967ல் ஒரு பெண்ணுக்கு அந்த பெண் சம்மதமின்றி கருத்தடை " லூப் " மாட்டப்பட்டதா ?

(இ) இதுபற்றி மருத்துவச்சாலை கண்காணிப்பாளருக்கும், போலீசுக்கும் புகார் செய்யப்பட்டதா ?

(உ) அதன்மேல், எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: இது குறித்துக் கவனிக்கப்பட்டது. அந்தப் பெண்ணின் இசைவின்றிக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிடப்பட்ட இந்த மருத்துவ மனையில் கருத்தடை வளையம் பொருத்தப்பட்ட 3,000 மகளிர்களில் இந்தப் பெண் சம்பந்தப்பட்ட வரையில் மட்டுமே கவனிப்பின்மையால் முன்னதாகவே இவரிடம் கையொப்பம் பெறப்படவில்லை. இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமிருப்பதாக அரசாங்கம் கருதவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, அந்தப் பெண்ணின் சம்மதமின்றி பிரசவம் ஆகிய 5, 6, நாட்களுக்குள் தனக்கு லூப் பொருத்திவிட்டதாக பல இடங்களில் புகார் செய்தும், பத்திரிகையில் அறிக்கைகள் கொடுத்தும் இருக்கிறாள். அந்த மாதிரி தவறு நடக்காமல் இனிமேல் இருக்க அரசு கவனிப்புக் கொடுக்குமா ?

5th March 1968]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தலைவரவர்களே, அது பற்றிய ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

The insertion of an I. U. C. D. is a surgical procedure and cannot be done without a patien's knowledge and consent unless brute force is employed or the patient is rendered unconscious by an anaesthetic.

இது போன்ற தவறுகள் ஏற்படாமல் இனிமேல் கவனித்துக் கொள்ளப் படும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.[

III.—ADJOURNMENT MOTION *RE.* ATTACK BY UNRULY ELEMENTS ON THIRU E. V. K. SAMPATH AND TWO OTHERS.

MR. CHAIRMAN : I have received notice of a motiton under rule 43 of the Madras Legislative Council Rules given by Thiru K. Rajaram, Leader of the Opposition, for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the attack by certain unruly elements on the parties to the court proceedings and witnesses, namely, Thiru-valargal E. V. K. Sampath, Kannadasan, Jayakantan and others, who were coming out of the First Class Magistrate's Court, Madurai, and the serious injuries to one of them by the use of *arival.* I wonder how this will come under the rule governing adjournment motions. If the hon. Member can say how it comes under this rule, I shall then give my ruling.

திரு. கே. ராஜாராம் : தாங்கள் வாசித்த தீர்மானத்திலேயே விளக்கம் இருக்கிறது. இது நேற்றுதான் நடந்த விஷயம். ஆகையால், இதைப் பற்றி விவாதிப்பதற்கு சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோரு கையில், இந்த விஷயம் அப்படி ஒத்தி வைத்துப் பேசுவதற்கு தகுதி உடைய ஒன்றுகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அத்துடன் நீதி ஸ்தலங்களுக்கு முன்னல் பயமற்ற முறையில் இப்படிப்பட்ட கலவரங் கள், கோர்ட்டுக்குப் போய் வரவே இயலாத வகையில் நடந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. கோர்ட்டுக்கு ஒரு வழக்கின் காரணமாகச் சென்றவர்கள், அந்த கோர்ட்டிலிருந்து வெளியே வரும்பொழுது இந்தக் கலவரங்கள் நடந்திருக்கின்றன. இந்தக் கலவரத்திலே யார் குற்றவாளி கள் என்பது என்னுடைய பிரச்சினை இல்லை. கலவரம் நடக்கும்பொழுது, தேவையான போலீஸ்காரர்கள் இருந்திருந்தால், இந்தக் கலவரங்கள் ஏற்படாமல் தடுத்திருக்க முடியும். தவிர, இந்தக் கூட்டம் ஒரு வழக்கு சம்மந்தமாக அதிக நேரமாகக் கூடியிருக்கிறார்கள். இரு கட்சியின் தரப் பிலும் ஒரு 3,000 பேர் கூடியிருக்கலாம் என்று தெரிய வருகிறது. இந்த மாதிரி கலவரம் ஏற்படலாம் என்று போலீஸ்காரர்கள் எதிர்பார்த்து இதைத் தடுப்பதற்கான முஸ்தீபுகளைச் செய்து, அதிக போலீஸ்காரர்களை அந்த இடத்திலே நிறுத்தி வைத்திருப்பார்களேயானல், இதைத் தடுத் திருக்க முடியும். ஆகவே, இப்படி கூட்டம் கூடும் இடத்திலே ஒரு கலவரம் வரலாம் என்று தெரிந்திருந்தும், இந்தப் போலீஸ் அதைத் தடுக்காமல் இருந்துவிட்டது என்பதுதான் குற்றச்சாட்டு. இந்த விஷயம் மிகவும் அவ சரமானது. இந்த மாதிரி தடுத்திருக்கக் கூடிய ஒரு குற்றத்தைத் தடுக்கா மல் விட்டதால், பெரிய விளைவுகள் ஏற்பட்டுவிட்டன. இதனல் பொது ஜனங்களிடையே ஒரு பீதி ஏற்பட்டு, அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டது. இந்த மாதிரி, சாதாரண மக்கள் கோர்ட்டுகளுக்குக் கூட போக முடியாத நிலைமை மாகாணத்திலேயே இரண்டாவது பெரிய நகரமாக

3-30 p.m.